IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR
O.S.No. 248/2017

Deposition of PW 3 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 19.06.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | ராஜேஸ்வரி | **Caste** | : | |
| **W/o.** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

முதல் விசாரணை :–

நான் பள்ளிப்பட்டி குரூப் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தததன் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். கூனாண்டியூர் கிராமம் சர்வே எண் 167/3I யின் விஸ்தீரணம் ஹெக்டேர் 0.19.5 ஆகும். 167/5C யின் விஸ்தீரணம் ஹெக்டேர் 0.52.0 ஆகும். 167/6D யின் விஸ்தீரணம் ஹெக்டேர் .0.26.00 ஆகும். சர்வே எண் 167/3I அ பதிவேட்டின்படி தைலப்பன் பெயரில் உள்ளது. சர்வே எண் 167/5C அ பதிவேட்டின்படி தைலப்பன் பெயரில் உள்ளது. சர்வே எண் 167/6D அ பதிவேட்டின்படி தைலப்பன் பெயரில் உள்ளது. நீதிமன்ற அழைப்பாணை கிடைக்கப்பெற்ற பின்னிட்டு மேற்படி இடங்களை சென்று நேரில் பார்த்தேன். சர்வே எண் 167/5C மற்றும் சர்வே எண் 167/6D ஆகியவற்றிற்கு சர்வே எண். சர்வே எண் 167/6A மற்றும் சர்வே எண் 167/6B ஆகியவற்றின் வழியாகதான் செல்ல முடியும் என்றால் சரியல்ல. சர்வே எண் 167/5C மற்றும் சர்வே எண் 167/6D ஆகியவற்றிற்கு 167/6F யில் உள்ள மண் தடம் வழியாகதான் போக முடியும். சர்வே எண். 167/6C கிணறு அ பதிவேட்டின் படி தைலப்பன் மற்றும் இரண்டு பேர் பெயரில் உள்ளது. சர்வே எண். 167/6B யை ஒட்டி மேற்கே சர்வே எண் 167/6A யில் மெயின் ரோடு தென் வடலாக செல்கிறது. நான் கொண்டு வந்துள்ள மேற்படி சர்வே எண்ணிற்கான புல வரைபடத்தில் 167/6F

யில் பாதை எதுவும் இருப்பதாக காட்டப்படவில்லை. சர்வே எண் 167/6F யில் வெங்கடாசலம் வீடு உள்ளது. அதே போல் 167/E யிலும் வெங்கடாசலத்திற்கு ஒரு வீடு உள்ளது என்றால் அசோகன் பெயரில் உள்ளது. 167/6C யை ஒட்டி 167/6B யில் தென் வடலாக ஒரு பிணக்குழி உள்ளது என்றால் சரிதான். மேற்படி பிணக்குழியை ஒட்டியவாறு கிழ புறம் 167/6 B அமைந்துள்ளது என்றால் சரிதான். 167/6A யில் மெயின்ரோட்டில் இருந்து இறங்கி 167/6E, 167/6F ஆகியவற்றை ஒட்டி கோனூர் மேற்கு கிராம எல்லை உள்ளது. சர்வே எண்.167/3 I க்கான பட்டா **சா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்.167/5C 2 மற்றும் 167/6D3 க்கான பட்டா **சா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்.167/5C 1 மற்றும் 167/6D2 க்கான பட்டா **சா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்.167/5C 3 மற்றும் 167/6D1, 167/6D4 க்கான பட்டா **சா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 167/5C மற்றும் 167/6D ஆகியவற்றிற்கான அ பதிவேடு உண்மை நகல் **சா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண். 167 க்கான புல வரைபடம் உண்மை நகல் **சா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்.167/3I, 167/5C1, 167/5C2, 167/5C3, 167/6D1, 167/6D2, 167/6D3, 167/6D4 ஆகியவற்றிற்கான 1426 முதல் 1434 பசலி வரையிலான அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல்கள் (20 எண்ணிக்கைகள்) **சா.சா.ஆ.11 வரிசையாக** குறியீடு செய்யப்படுகிறது. 167/5C மற்றும் 167/6D உட்பிரிவு செய்யப்பட்டதற்கு பின்னிட்டு சர்வே எண்.167/3I, 167/5C1, 167/5C2, 167/5C3, 167/6D1, 167/6D2, 167/6D3, 167/6D4 ஆகியவற்றிற்கான அ பதிவேடு உண்மை நகல் **சா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு வழக்கு சொத்தை கடந்த 17.06.2023 யில் பார்வையிட்ட சமயம் நீதிமன்ற ஆணையருடன் நான் இருந்தேனா என்றால் இல்லை. 08.07.2024 ந்தேதியில் இருந்துதான் மேற்படி

கூனாண்டியூர் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். அழைப்பாணை பெற்றதற்கு பின்னிட்டு மேற்படி இடத்தில் சென்று பார்வையிட்டதாக கூறியுள்ள நிலையில் எந்த தேதியில் சென்றேன் என்றால் தேதி நினைவில் இல்லை. எனக்கு அனுப்பப்பட்ட சாட்சி அழைப்பாணையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். சர்வே எண்.167/3I, 167/5C, 167/6D, ஆகியவற்றிற்கான ஆவணங்கள் கொண்டு வர அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் 167/6A பூஸ்திதி பாதை ஆகும். அது உட்பிரிவு ஆகவில்லை. 167/6B உட்பிரிவு ஆகவில்லை. அது வெங்கிடு என்பவர் பெயரில் உள்ளது. 167/6B ஒரு சமாதி உள்ளது. 167/6C உட்பிரிவு ஆகவில்லை. 167/6D, 167/6D1, 167/6D2, 167/6D3, 167/6D4 ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. அழைப்பாணையில் சொல்லியுள்ளது போல் 167/6A, 167/6B மற்றும் 167/6E யின் வழியாக ஒரு வண்டிப்பாதை இல்லை என்றால் சரிதான். 167/6F பில் ஒரு மண்பாதை உள்ளது. மேற்படி நான் குறிப்பிடும் மண் பாதை புல வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் எங்களது ஆவணங்களின்படி 167/6F பாதை என்று வகைப்பாடு செய்யப்படவில்லை என்றாலும் சரிதான்.

**2 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை அனுசரித்து கொள்வதாக கூறப்பட்டது.

**மறு விசாரணை இல்லை**

ஒம்/-ராஜேஸ்வரி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-A. சண்முகப்பிரியா,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.